**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூன் - 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | நாடகமும் அரங்கியலும் I | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

**பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்க.**
**பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
**இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1) அரிஸ்டோட்டில் தனது கவிதையியலில் (poetics) நாடகத்தின் முதன்மை அம்சம் எனக் கொண்டது
1) கதைப்பின்னல் 2) பாத்திரம் 3) சிந்தனை
4) காட்சியும் இசையும் 5) சொற்றிறன் (..............)

2) நாடகத்தினை திருஷ்யகாவியம் என அழைக்கும் மரபு
1) கிரேக்க மரபு 2) சமஸ்கிருத மரபு 3) சிங்கள மரபு
4) தமிழ்கூத்து மரபு 5) இசைநாடக மரபு (..............)

3) கதாசிஸ் எனக் கிரேக்க மரபில் கூறப்படும் (உணர்ச்சி) வெளிக்கொணர்கையில் இடம் பெறும் உணர்ச்சிகள்
1) இரக்கமும் பயமும் 2) பயமும் வியப்பும் 3) பரிவும் கழிவிரக்கமும்
4) சோகமும் அன்பும் 5) கழிவிரக்கமும் சோகமும் (..............)

4) சமஸ்கிருதநாடகத்தின் ஐந்து நிலைகள் பற்றி எடுத்துக் கூறும் நாட்டிய சாஸ்திர சுலோகத்தில் **பலசம்யோக** என்ற சொல் குறிப்பது
1) நாடக ஆரம்பத்தை 2) நாடக மோதுகையை 3) தலைவனின் முயற்சி
4) நோக்கம் நிறைவேறுதல் 5) நாடக உச்சக் கட்டம் (..............)

5) ஈஸ்கிலஸ் காலத்து திறஜெடியில் காணப்படாத அம்சம்
1) மூன்று அலகுகளைக் கொண்டதாக விளங்கியமை
2) மூன்று அலகுகளையும் சற்றர் நாடகத்தையும் கொண்டதாக விளங்கியமை
3) முற்றிலும் பாடல் வடிவமாக அமைந்தமை
4) மோதுகையின் தொடக்கம் முதிர்வு இணக்கத்தைக் கொண்டதாக அமைந்தமை
5) ஆதி அற்புதக் கதைகளைக் கொண்டதாக அமைந்தமை (..............)

6) ஆற்றுகைக் கலைகள் என்று கூறப்படுவனவற்றுள் பொதுவாக இடம்பெறாதது யாது?
1) ஓவியம் 2) நாடகம் 3) நடனம்
4) சிலம்படி 5) பாடல் (..............)

7) ஒபேறா வகை நாடகத்தில் முக்கியம் பெறுவது
1) பாடல் 2) ஆடல் 3) சொல்லாடல்
4) எடுத்துரைப்பு 5) ஊழல் (..............)

8) பரத முனிவர் ரசங்களைக் குறிப்பிடும் போது எட்டு வகை எனக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் மெய்ப்பாடுகளின் தொகை
1) பத்து 2) ஒன்பது 3) எட்டு
4) ஏழு 5) ஆறு (..............)

9) சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பில் "தனக்குப் பயன் ஏதுமின்றி தலைவனின் விருப்பத்திற்காக பாடுபடுவதாக" கற்பனை செய்யப்படும் வரலாறு
1) பிஜ 2) பிந்து 3) காரிய
4) பிரகரி 5) பதாக (..............)

10) தமிழக அரங்க வரலாற்றில் எடுத்துரைக்கும், கதை கூறல்ப்பாங்கான அரங்கமரபு காணப்பட்ட காலம்
1) சங்க காலம் 2) கோயில் பண்பாட்டுக் காலம் 3) சிலப்பதிகார காலம்
4) கலித்தொகைக் காலம் 5) விஜயநகர நாயக்கர் காலம் (..............)

11) நாடக விமர்சகர் என்பவர்
1) எழுத்துருவை நன்கு வாசித்திருக்க வேண்டும்
2) பார்ப்போனிலும் பார்க்க நாடக உள்ளடக்கம் தொடர்பாகத் தெளிவான அறிவும் உயர் நயப்பாற்றலும் வேண்டும்
3) பக்கச்சார்பானவராக இருத்தல் வேண்டும்
4) நாடக ஒத்திசைகளுக்கு முறையாக வருகை தருதல் வேண்டும்
5) நெறியாளருடன் கலந்துரையாடி விமர்சனத்தை முன்வைப்பார் (..............)

12) மேல்நாட்டு அரங்கில் பேசப்படும் "மூன்றன் ஒருங்கியையபு" குறிப்பது
1) ஆரம்பம், இடை, முடிவு ஆகும்
2) காலம், வெளி, இடம் ஆகும்
3) கதைப்பின்னல், கதாநாயகன், முறுக்கு அவிள் முடிவமைவிலாகும்
4) செயல், இடம் காலமாகும்
5) கதைப்பின்னல், பாத்திரம், சிந்தனை ஆகும் (..............)

13) சமஸ்கிருத நாடகத்தில் கதாநாயகன்
1) நாடக இறுதியில் இறப்பான்
2) விகடத்திற்கான பொருளாவான்
3) தனது இலட்சியத்தினை ஈட்டிக்கொள்பவனாக இருப்பான்
4) தோழியை மணம் புரிவான்
5) ஆளுமையற்றவனாக இருப்பான் (..............)

14) அபத்த நாடகம் பற்றிய கூற்றுக்களுள் பொருத்தமற்றது
1) காரணகாரிய தொடர்புடன் வளர்க்கப்பட்டிருக்கும்
2) மொழி மதிப்பிழந்து காணப்படும்
3) உரையாடல் அர்த்தமற்றுக் காணப்படும்
4) வாழ்வின் அர்த்தமின்மைகளை வெளிப்படுத்தும்
5) பிரச்சினையிலிருந்து விடுபடாத தன்மை காணப்படும் (..............)

15) இந்தோனேசிய வயங்குலிற்" (wayankulit) எனும் நாடக வகை நிகழ்த்தப்படும் முறைமை
1) பொம்மைகளைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும்
2) நிழல் பொம்மைகளைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும்
3) ஊமங்களைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும்
4) வேட முகங்களை பயன்படுத்தி செய்யப்படுவதாகும்
5) நடிகர்களைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும் (..............)

16) குரூர அரங்கின் முன்னோடிகளில் ஒருவராக வருபவர்
1) ஆர்த்தோ (Artaud)
2) ஒகஸ்தா போல் (Augusta Boal)
3) குறோட்டோ வஸ்கி (Grotowski)
4) பீற்றர் புறூக் (Peter Brook)
5) றிச்சேட் செக்னர் (Richard Schechner) (..............)

17) ஸ்பெஷல் நாடக மரபில் நடித்த பெண் கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்
1) பாலாமணி அம்மையார், கன்னிகா பரமேஸ்வரி, மங்கை
2) பலாமணி அம்மையார், கே.பி சுந்தராம்பாள், எம். எஸ். சுப்புலட்சுமி
3) ருக்மணிதேவி, பத்மா சுப்பிரமணியம், எம். எஸ். சுப்புலட்சுமி
4) மங்கை, பலாமணி அம்மையார், இந்திரா
5) கே.பி சுந்தராம்பாள், இந்திரா, திரவியம் இராமச்சந்திரன் (..............)

18) பல்லவர் காலத்தில் எழுதப்பெற்ற அங்கதச் சுவையுள்ள நாடகம்
1) இராஜராஜேஸ்வரன் நாடகம்
2) பூம்புலியூர் நாடகம்
3) மத்தலவிலாசப் பிரகசனம்
4) ஆரியக் கூத்து
5) சாக்கைக் கூத்து (..............)

19) முற்றிலும் மகாகவி உருத்திர மூர்த்தியின் ''பா'' நாடக பாடல்களின் பெயர்களைக் கொண்ட தொகுதி
1) கோடை, தரிசனம் , புதியதொரு வீடு
2) கோடை, வெறியாட்டு, புதியதொரு வீடு
3) கண்மணியாள்கதை, முற்றிற்று, தரிசனம்
4) கோடை, முற்றிற்று, புதியதொரு வீடு
5) கோலம் , கண்மணியாள்கதை, கந்தன் கருணை (..............)

20) மத்திய காலத்துப் பிரதான நாடக வகைகள் ஒன்று
1) ஒழுக்கப்பண்பு இடைநிகழ்வு 2) வீர நாடகம் 3) விகட நாடகம்
4) அற்புத நாடகம் 5) பாணர் இசை நிகழ்ச்சி (..............)

21) பின்வருவனவற்றுள் நடன மூலம் செய்து காட்டப் பெறும் நாடக வடிவம்
1) இராம நாடக கீர்த்தனை 2) பூத்ததம்பி விலாசம் 3) வேலைக்காரி
4) மூவிராசாக்கள் நாடகம் 5) நந்தனார் சரித்திர கீர்த்தனை (..............)

22) ஈழத்து தமிழ் நாடக வரலாறு தொடர்பாக முதல் எழுதப்பட்ட ஆய்வு நூல்
1) ஈழத்து தமிழ் நாடக அரங்கு
2) இலங்கை பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்கு
3) வட இலங்கையர் நாட்டார் அரங்கு
4) மட்டக்களப்பு மரபுவழி அரங்கு
5) மன்னார் மாதோட்ட மரபுவழி அரங்கு (..............)

23) 'அருமை நண்பன்' நாடகத்தின் மூலம் அறிமுகமான ஈழத்து நாடகவியலாளர்
1) கலையரசு சொர்ணலிங்கம் 2) க. கணபதிப்பிள்ளை
3) குழந்தை ம. சண்முகலிங்கம் 4) அ.தாசீசியஸ்
5) சி. மௌனகுரு (..............)

24) 1980 களில் ஈழத்தமிழ் அரங்கில் காத்திரமான பங்களிப்பைச் செய்த நாடகம்
1) அன்னையிட்ட தீ 2) வேள்வித் தீ 3) எந்தையும் தாயும்
4) மண்சுமந்த மேனியர் 5) நீ செய்த நாடகம் (..............)

25) ''சமூக மாற்றத்திற்கான அரங்கு'' எனும் நூலினை எழுதியவர்
1) ம. சண்முகலிங்கம் 2) செ. சுந்தரம்பிள்ளை 3) நா. சுந்தரலிங்கம்
4) சி. மௌனகுரு 5) க. சிதம்பரநாதன் (..............)

26) ஜப்பானிய நோஹ் அரங்கில் ஹசிககாரி (Hashigagari) எனக் குறிப்பிடப் பெறுவது
1) மேடை அலங்காரம் 2) ஒருவகை வேடமுகம் 3) ஒரு பாடற் பகுதி
4) ஒருவகை மேளம் 5) வரவு மேடைப் பகுதி (..............)

27) பீஜிங் ஒப்பேராவில் காணப்படும் வகைமாதிரியான அடிப்படைப் பாத்திரங்களுள் ஒன்று அல்லாதது
1) செங் (Sheng) 2) டான் (Dan) 3) ஜிங் (Jing)
4) ஜிங்கி (Jingxi) 5) சௌ (Chou) (..............)

28) அபத்த நாடகங்களை எழுதியோர் அடங்கும் தொகுதி
1) யூஜின் ஓநில், அயனஸ்கோ, ஜெனே
2) அயனஸ்கோ, சாமுவெல் பெக்கற், ஜெனே
3) ஜெனே, பிறெக்ற், இப்சன்
4) அயனஸ்கோ, சாமுவெல் பெக்கற் , ஆதர்மில்லர்
5) சமுவெல் பெக்கற், ஜெனே, செக்கோவ் (..............)

29) ஜம்பாளிய ஐந்து வகை பாரம்பரிய நாடகங்களில் விகடப் பண்பு நிறைந்த நாடகவகை எது?
1) நோஹ் 2) சுபூக்கி 3) புன்ராக்கு
4) கியோண் 5) கொவாகா (..............)

30) ஜப்பானிய நாடகத்தில் ஜொறூறி (joruri) என அழைக்கப்படுபவர்
1) நடிகர் 2) நெறியாளர் 3) இசைக்கலைஞர்
4) தயாரிப்பாளர் 5) உரைஞர் (..............)

31) கோலம நாடக மரபு இலங்கையில் எந்த மாகாணத்தில் ஆடப்படுகின்றது
1) சப்பிரகமுவ மாகாணத்தில் 2) மேல் மாகாணத்தில்
3) வடமத்திய மாகாணத்தில் 4) தென் மாகாணத்தில்
5) மத்திய மாகாணத்தில் (..............)

32) சிங்கள நாடக மரபில் சொக்கரி என்பது
1) இரு பெண்கள் ஆடுவதை குறிப்பது
2) பிற பிரதேசத்திற்குரிய ஒருவரின் வருகையை குறிப்பது
3) மேடை நாடகத்தை குறிக்கும்
4) தெருவில் ஆடுவதை குறிக்கும்
5) தனியாட்டத்தை குறிக்கும் (..............)

33) துள்ளுக் கூத்து என அழைக்கப்படுவது
1) மகிடிக் கூத்து 2) காத்தவராயன் கூத்து 3) பறைமேளக் கூத்து
4) கோவலன் கூத்து 5) காமன் கூத்து (..............)

34) குளிர்த்திச் சடங்கு நடைபெறும் மாதம் பெரும்பாலும்
1) மாசி மாதம் 2) பங்குனி மாதம் 3) வைகாசி மாதம்
4) புரட்டாதி மாதம் 5) ஐப்பசி மாதம் (..............)

35) இலங்கையின் முதலாவது சிங்கள 'நாடகம' வான 'அஹலேபொல்' நாடகமவைத் தயாரித்தவர்
1) சாள்ஸ் டயஸ் 2) திஸ்ஸ காரியவசம் 3) பிலிப்பு சிஞ்சோ
4) E.F.C லுடோவைக் 5) பீற்றர் டி சில்வா (..............)

36) நூர்த்தி நாடகத்தை இலங்கையில் பரப்பிய பெருமைக்குரியவர்
1) பந்துல குணவர்தனா 2) கென்றி ஜெயசேனா 3) பராகிரம நிரியல்ல
4) ஜோன் டி. சில்வா 5) தர்மசிறி பண்டாரநாயக்க (..............)

37) ஆய்சியர் குரவையில் குறைந்தது எத்தனை பேர் ஆட்டத்தில் பங்கேற்பர்
1) ஒன்பது 2) எட்டு 3) ஏழு
4) ஆறு 5) ஐந்து (..............)


(அ)


(ஆ)


(இ)

38) படம் (அ) இல் காணப்படும் வேடமும் எவ்வகை நோயைக் குறிக்கின்றது
1) அழுக்குச் சன்னி 2) ஊமைச் சன்னி 3) மூடச் சன்னி
4) செவிட்டுச் சன்னி 5) விசர்ச் சன்னி (..............)

39) படத்தில் (ஆ) இல் காணப்படும் நாடக ஆசிரியர் எழுதிய நாடகத் தொகுதி
1) மொம்மை வீடு, கண்ணாடி வார்ப்பு, கோடோவுக்காக காத் திருத்தல்
2) சமுகத்தின் தூண்கள், கண்ணாடி வார்ப்பு, பேய்கள்
3) சமுகத்தின் தூண்கள், மக்களின் பகைவன், பேய்கள்
4) மொம்மை வீடு, சமுகத்தின் தூண்கள், பகைவன்
5) கண்ணாடி வார்ப்பு, கோடாவுக்காக காத்திருத்தல், பேய்கள் (..............)

40) படம் (இ) இல் காணப்படும் நடனம்
1) மணிப்புரி 2) கண்டிய நடனம் 3) பலே
4) கதக் 5) கதகளி (..............)

❖ பகுதி II இல் பிரிவு A யிலிருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு B இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி II

### பிரிவு A

**1)** 1. "ஆற்றுகைக் கலைகள்" எனும் சொற்றொடர் மூலம் கருதப்படுவது யாது? (4 புள்ளி)

2. கைவினைக் கலைகள் எனப்படுபவை யாவை? (4 புள்ளி)

3. நாடகக் கலையின் சிறப்பு பண்புகளை கூறி விளக்குக. (7புள்ளி)

**2)** 1. அரிஸ்ரோட்டிலின் கவிதையியலில் குறிப்பிடப்பட்டுள்ள கதாசிஸ் என்பதால் கருதப்படுவது யாது? (4 புள்ளி)

2. அரிஸ்ரோட்டிலின் மும்மைக் கோட்பாட்டை கூறி விளக்குக. (4 புள்ளி)

3. அரிஸ்ரோட்டில் கூறும் திறஜெடியின் கட்டமைப்பையும் பரதர் கூறும் நாட்டிய சாஸ்திர கட்டமைப்பபையும் ஒப்பிட்டு விளக்குக. (7 புள்ளி)

**3)** நடிப்பு முறைமை காலத்திற்குகாலம் வேறுபட்டு வருகின்றது

1. மொஸ்கோ கலையரங்கின் முறைமைக் கோட்பாட்டை எடுத்து விளக்குக. (4 புள்ளி)

2. பிறெ.்.ட்டின் கோட்பாடு வேறுபடுமாற்றை எடுத்து விளக்குக. (4 புள்ளி)

3. மேற்கூறிய இரண்டு கோட்பாடுகளிலும் இருந்து ஒகஸ்தாபோலின் கோட்பாடு வேறுபடுகின்றது என்பதை விளக்குக. (7 புள்ளி)

### பிரிவு B

**4)** 1. இந்திய சமஸ்கிருத அரங்கில் பார்வையாளர் பெறும் (ரச) உணர்வு பற்றிச் சித்தரிக்குக. (5 புள்ளி)

2. நடிப்பின் போது நால்வகை அபிநயங்களை எவ்வறு பயன்படுத்துகின்றனர் விளக்குக. (5 புள்ளி)

3. இந்திய அரங்க மரபில் பேசப்படும் தர்மிகளின் பிரிவுகளை விளக்குக. (5 புள்ளி)

**5)** அரங்கு என்பது நிகழ்த்தப்படுகின்ற நிகழ்வோடு தொடர்புடைய அனைத்து விடயங்களையும் அரங்கு என்கின்றனர் பின்வரும் அரங்குகள் பற்றி விபரிக்குக.

1. சிலப்பதிகார அரங்கு (5 புள்ளி)
2. ஜப்பானிய கபுகி அரங்கு (5 புள்ளி)
3. புறொசீனியம் அரங்கு (5 புள்ளி)

**6)** கீழே தரப்பட்டவற்றிற்குள் எவையேனும் மூன்றிற்குச் சிறு குறிப்பு எழுதுக.

1. வானெலிநாடகம்
2. யப்பானிய பாவை அரங்கு
3. பாண்டவர் வனவாசம்
4. தஹட்ட சன்னிய
5. பலே ஆட்டம்

(3 x 5 = 15 புள்ளி)